DINAKARAN 15 MAR 2007

# ஆளுக்கு ஒரு மரம் வளர்க்க வேண்டும்

## ஜகி வாசுதேவ் அழைப்பு

கோவை, மார்ச் 15:'ஆளுக்கு ஒரு மரம் நட்டு வளர்த்தால் நாடு சுபிட்சமாகும்,' என ஈஷா யோக மைய நிறுவனர் ஜகி வாசுதேவ் கூறினார்.

கோவை அரசு மருத்துவமனையில் ஈஷா யோக மையத்தின் பசுமைக்கரங்கள் திட்டத்தின் கீழ் மரம் நடும் நிகழ்ச்சி நேற்று நடந்தது. ஈஷா யோக மைய நிறுவனர் ஜகி வாசுதேவ் மகிழம் பூக்கன்றை நட்டார்.

பின்னர் ஜகி வாசுதேவ் நிருபர்களிடம் கூறியதாவது: தமிழகத்தின் பசுமை பரப்பை பத்து சதவீதம் அதிகரிக்கும் நோக்கில் ஈஷா அறக்கட்டளையின் பசுமைக்கரங்கள் திட்டம் முழு முனைப்புடன் ஈடுபட்டு வருகிறது. அதற்கென 2006 முதல் 2011 வரை 11.4 கோடி மரங்களை நட்டு வளர்க்கும் நோக்குடன் பசுமைக்கரங்கள் செயல்படுகின்றன.

இதில் ஈஷா யோக மையத்தின் 25 ஆண்டைக் கொண்டாடும் வகையில் 2007ம் ஆண்டில் 2.5 கோடி மரங்கள் நட திட்டமிட்டுள்ளோம். ஒரு ஆண்டில் 2.5 கோடி மரங்கள்தான் நட முடியும் என்றில்லை. ஆறு கோடி மக்கள்தொகை கொண்ட தமிழகத்தில் ஆளுக்கு ஒருமரம் என்ற கணக்கில் நட்டு வளர்த்தால் நாடு சுபிட்சமாகும். தீர்த்தேவைகளை நாமே பூர்த்தி செய்து கொள்ள முடியும். கனிகள் தனக்கு கிடைக்குமா இல்லையா என எதிர்பார்க்காமல் மரங்களை நடுகிற மனிதர் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தேவை.

பசுமைக்கரங்கள் திட்டத்தின் கீழ் தமிழகம் முழுக்க நாற்றுப்பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. இங்கு தன்னார்வ தொண்டர்கள் மூலம் நாற்றுகள் வளர்க்கப்படுகிறது. இந்த பண்ணைகள் மூலம் தயாராகும் 25 லட்சம் மரக்கன்றுகள் வரும் அக்டோபர் 2ம் தேதி காந்தி ஜெயந்தியன்று ஒரே நாளில் தமிழகம் முழுக்க நடப்படும். மரங்களை நடுவது மற்றும் அல்லாமல் தண்ணீர் ஊற்று வளர்ப்பதும் தன்னார்வ தொண்டர்கள் மூலம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இவ்வாறு ஜகி வாசுதேவ் கூறினார். அரசு மருத்துவமனையில் நேற்று 60 மரக்கன்றுகள் நடப்பட்டன. முன்னாள் சி.பி.ஐ இயக்குனர் கார்த்திகேயன், அரசு மருத்துவமனைக் கண்காணிப்பாளர் குமரன், இருப்பிட மருத்துவ அதிகாரி அங்குசாமி, உதவி இருப்பிட மருத்துவ அதிகாரி சவுந்தரவேல் மற்றும் பலர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



அரசு மருத்துவமனையில் மகிழம்பூக்கன்றை நடுகிறார் ஈஷா யோக மைய நிறுவனர் ஜகி வாசுதேவ்.

DINAMALAR 15 MAR 2007



கோவை அரசு மருத்துவமனையில் ஈஷா யோகாமையத்தின் 'பசுமை கரங்கள்' அமைப்பு சார்பில் மரம் நடும் நிகழ்ச்சி நடந்தது. இதில், ஈஷா யோக மைய நிறுவனர் ஜக்கி வாசுதேவ் மரக்கன்றை நட்டார். அருகில், முன்னாள் சி.பி.ஐ., இயக்குனர் கார்த்திகேயன், அரசு மருத்துவமனை இருப்பிட மருத்துவர் அங்குசாமி, உதவி இருப்பிட மருத்துவர் சவுந்தரவேல் ஆகியோர் உள்ளனர்.

# மரம் நடுவிழா: ஜக்கி வாசுதேவ் பங்கேற்பு

கோவை, மார்ச் 15-

ஈஷா யோக மையம் சார்பில் கோவை அரசு மருத்துவமனையில் மரம் நடுவிழா நேற்று நடந்தது. இதில் ஈஷா யோக மைய நிறுவனர் ஜக்கி வாசுதேவ் மரம் நட்டார்.

தமிழகம் முழுவதும் தொடர்ந்து 5 ஆண்டுகள் மரக்கன்றுகளை நடும் 'பசுமைக்கரங்கள்' என்ற திட்டத்தை ஈஷா யோக மையம் செயல்படுத்தி வருகிறது.

இந்த ஆண்டு மட்டும் 2.5 கோடி மரங்கள் நட திட்டமிட்டுள்ளது. ஓர் அங்கமாக, கோவை அரசு மருத்துவமனையில் மரம் நடுவிழா நேற்று நடந்தது. ஈஷா யோக மைய நிறுவனர் ஜக்கி வாசுதேவ் விழாவில் பங்கேற்று, மரத்தை நட்டு வைத்தார். இந்நிகழ்ச்சியில் சி.பி.ஐ., முன்னாள் இயக்குநர் கார்த்திகேயன், அரசு மருத்துவமனை கண்காணிப்பாளர் குமரன், இருப்பிட மருத்துவ அலுவலர் அங்குசாமி, உதவி இருப்பிட மருத்துவ அலுவலர் சவுந்திரவேல் ஆகியோரும் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில், அரசு மருத்துவமனை வளாகத்தில் 50 மரக்கன்றுகள் நடப்பட்டன. அரசு மருத்துவமனையில் மூலிகைத் தோட்டம் அமைக்க ஜக்கி வாசுதேவ் டாக்டர்களிடம் அறிவுறுத்தினார்.

DINATHANTHI 15 MAR 2007



கோவை அரசு மருத்துவ மனையில் மரக்கன்று நடும் விழா டந்தது. இதில் ஈஷாயோக மைய சுவாமிஜி ஜக்கி வாசுதேவ் லந்து கொண்டு மரக்கன்றுகளை நட்டபோது எடுத்தபடம்.

### கோவை அரசு மருத்துவமனையில்

# மரக்கன்று நடும் விழா

## ஜக்கி வாசுதேவ் தொடங்கி வைத்தார்

கோவை,மார்ச்.15–

ஈஷா அறக்கட்டளை சார்பில் மிழகத்தை பசுமையாக்கிட சுமை கரங்கள் திட்டத்தின் கீழ் காவை அரசு மருத்துவ மனை யில் நேற்று மாலை மரக்கன்று டும் விழா நடந்தது. இதில் ஈஷா யோக மைய சுவாமிஜி ஜக்கி வாசு தேவ் கலந்து கொண்டு மரக்கன் றுகளை நட்டு தொடங்கி வைத் தார்.

இந்த நிகழ்ச்சியில், சி.பி.ஐ முன் னாள் இயக்குனர் கார்த்திகேயன், அரசு மருத்துவமனை டீன் கலா நிதி மற்றும் அரசு ஆஸ்பத்திரி இருப்பிட மருத்துவ அதிகாரி அங் குசாமி, உதவி அதிகாரி சவுந்திர வேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக சுவா மிஜி ஜக்கி வாசுதேவுக்கு ஆஸ்பத் திரி ஊழியர்கள், செவிலியர்கள் திரண்டு நின்று வரவேற்றனர்.